DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**
**ST.C.No. 783/2022 P.W. 1 சண்முகம் த/பெ. மகாலிங்கம்**

நாள் 27.02.2026

BNSS பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் PW1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாககல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

நான் இந்த வழக்கில் புகார் மனு, வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் எதிரி தனது தொழில் மற்றும் குடும்ப அபிவிருத்தி செலவினங்களுக்காக என்னிடம் கடந்த 03.01.2021 ம் தேதியன்று ரூ.8 லட்சம் கடன் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தொகையை எதிரியானவர் கடனாக பெற்ற போது 3 மாதத்தில் பணத்தை திரும்ப தருவதாக கைலெட்டர் எழுதிகொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எதிரி இந்த வழக்கு காசோலையை 30.06.2022 ம் தேதியன்று என்னிடம் கொடுத்ததாக வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

STC.No.783/2022 என்ற வழக்கில் கசோலை தொகை ரூ.4 லட்சத்திற்கு எதிரியானவர் 30.06.2022 ம் தேதியன்று காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 31.03.2022 ம் தேதியில் காசோலை திரும்பப்பட்ட நிலையில் எதிரியிடம் மீண்டும் 30.06.2022 ம் தேதியன்று வேறொரு காசோலையை நான் வாங்கினேன் என்றால் கொடுத்துவிடுவதாக சொன்னதின் அடிப்படையில் வாங்கினேன்.

எதிரிக்கு சொந்தமான TN 50 S7839 என்ற பதிவெண் கொண்ட மாருதி Swift கார் மற்றும் TN50 XY 4001 என்ற பதிவெண்கொண்ட ராயல் என்பீல்ட்டு மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை எடுத்து சென்று எதிரிக்கு கொலை மிரட்டல் விடுத்தாக கடந்த 02.01.2022 ம் தேதியன்று எதிரி என் மீதும், என் மனைவி மற்றும் நந்தகுமார் ஆகியோர் மீது மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி கொடுத்த புகாரின் பேரில் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் கடந்த 02.01.2022 ம் தேதியன்று மனு எண்.9/2022 ன் கீழ் மனு ரசீது வழங்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என் மீதும், எனது மனைவி மீதும் 02.01.2022 ம் தேதி புகார் கொடுத்துள்ள நிலையில் அதற்கு அடுத்த நாள் 03.01.2022 ம் தேதியன்று நான் எதிரிக்கு ரூ.8 லட்சம் கடன் கொடுத்ததாக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் எதிரியிடம் இருந்து எடுத்துசென்ற எதிரிக்கு சொந்தமான கார் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை எதிரியிடம் ஒப்படைக்க வேண்டுமானால் எதிரி எனக்கு காசோலை கொடுக்க வேண்டும் என்று எதிரியை மிரட்டி அவரிடம் இருந்து வழக்கு காசோலை பெறப்பட்டது என்றால் சரியல்ல. எந்த வொரு மறு பயனும் இல்லாமல் எதிரியிடம் இருந்து பெறப்பட்ட காசோலையின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

நான் நீதிமன்றத்தில் உண்மை விவரங்களை மறைத்து கறைபடிந்த கரங்களுடன் நான் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் நான் கோரியுள்ள எந்தவொரு பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. சட்டத்தால் வலியுறுத்தி பெறக்கூடிய கடனுக்காக வழக்கு காசோலை எதிரியால் கொடுக்கப்பட்டது என்பதை நான் நீரூபணம் செய்யமுடியாத நிலையில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi.